ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௰. ஸ்ரீமுகஹு ஆவணிமீ பகுதி க.
Vol. 10. August & September 33. No. 1.

திவாகரத்தின் பத்தாவதாண்டு.

——:o:——

கமழ்கின்றவாசவகுளச்செழுங்கன்னியம்தேன்
உமிழ்கின்றதிண்டோள்அரசைப்பவவோதநீர்க்குள்
அமிழ்கின்றவென்னைக்கரையேற்றுதற்காகவேதம்
தமிழ்செய்தஞானகுருகூரனைத்தாள்துதிப்பாம்.

திருநாராயணன்றன் திருவருளால் திவாகரத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைவுற்றுப் பத்தாவது ஆண்டு தொடங்கப்பெறுகிறது. கழிந்த ஒன்பதாண்டு முடிவாக நிகழ்ந்த விஷயங்களைத் திவாகரத்தின் ஒன்பதாவது தொகுதியின் பன்னிரண்டாம் பகுதியில் தெரிவித்தோம்.

இன்னும் நல்ல சீர்திருத்த முறையில் பலபேர்களின் உபகாரத்தைப்பெற்று நடத்த வேண்டுமென்ற கருத்தால் இவ்வளவுகாலம் தாமதிக்கலாயிற்று.

"இப்பொழுது திவாகரத்திற்கு நல்ல காலமில்லாவிட்டாலும், இனியோர் காலத்தில் ஆக்கம் வந்தெய்தக்கூடும்; ஆகையால் விடா முயற்சியைக் கைப்பற்ற வேண்டும்" என்று ஆய்ந்தமைந்த கொள்கையையுடைய அறிஞருறுதிகூறினர்கள். அவர்களுடையஆசீர்வாதத்தையே சிறந்த ஐசுவர்யமாகக்கொண்டு நிகழும் ஸ்ரீமுகஹு ஆவணி மாதத்தையே திவாகரத்தின் பத்தாவதாண்டின் ஆரம்பமாக வைத்து வெளியிடத் தொடங்குகிறோம்.

நாஸ்திகவாதங்களும், வீண் வேடிக்கைகளும் நிறைந்துள்ள இக்காலத்தில் இத்தகைய பத்திரிகை உலாவினால் சில ஆஸ்திகர்களுக்கா

வது பிரயோஜனப்படும். இந்த நன்மையை இழந்துவிடாதிருக்கச் செய்யவேண்டியதென்ன என்று ஆராய்ந்து, உபகரிக்கும் சக்தியுடைய ஆஸ்திகர்களாயுள்ளவர்கள் இருபது பெயர்களேனும் வருஷந்தோறும் பத்துப் பத்துரூபா கொடுத்துதவ வேண்டுமென்று வேண்டிக்கொண்டோம். சிலஆப்தர்கள் மாத்திரம் அவ்வாறே உபகரிப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். எங்களுடைய பிரார்த்தனையின்படி இன்னும் இருபது பெயர்கள் சேர்ந்தார்களில்லை.

இக்காலத்தில்நகைச்சுவையுடைய விகடப்பத்திரிகைகளே மிகுதியாக உலாவி பலபெயர்களையும் குதூகலப்படுத்துவதுபோல வேதாந்த விஷயங்களையும் அவ்வாறே வெளியிட்டால் பலரும் விரும்பிப் பயில்வதற்கு ஏதுவாயிருக்குமென்று கருதுகிறார்கள். வேதாந்தங்களின் நுண்பொருள்களை எளிதாக வெளியிடுவதற்காகவே ஸ்மிருதி இதிஹாஸ புராணங்கள் தோன்றின. இவற்றையும் பயில்வார் குறைந்து விட்டனராதலால் எல்லாவிஷயங்களும் ஹாஸ்யமாகவேயிருக்கவேண்டுமென்கின்றனர். காலததினியல்பால் உலகினர்க்குஇத்தகையஎண்ணம் தோன்றுகிறது. வேதமார்க்கத்திற்கு மாறுபடாமல் எந்த விஷயங்கள் நகைச்சுவை நிரம்ப எழுதக்கூடுமோ அந்த விஷயங்களும் இனி திவாகரததில் வெளியிடப்பெறும்.

ஒன்பதாண்டு முடிவாக ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்த திலகர்களாக எழுந்தருளியிருக்கின்ற பல பெரியோர்கள் திருவுள்ளமுகந்து ஸாதித்தருளிய பலவரியவிஷயங்கள் வெளியாயின. திவ்யஸூரிசரித மொழிபெயர்ப்பு முதலிய நூல்களும் புஸ்தகரூபமாக வெளிவந்தன. மேலும் இவை போன்றவை வெளிவரவேண்டும். இஃதொருபுறமிருக்க, இக்காலத்தில் வைதிக மார்க்கத்திற்கு விரோதமாக எத்தனையோ எண்ணி முடியாத விஷயங்கள் தோன்றுகின்றன. இவற்றிற்கெல்லாம் ஹாஸ்யரூபமாகப் பிரமாணங்களை உள்ளடக்கிக் கண்டனமெழுதவேண்டும். சாஸ்திரமும் மாந்தர்களின் மனப்போக்கின்வழியே சென்று *ப்ரபு ஸம்ஹிதை, ‡ காந்தா ஸம்ஹிதை † மித்ர ஸம்ஹிதை முதலிய வடிவங்

---

* ப்ரபு ஸம்ஹிதை—அரசன்போலக் கட்டளையிடுவது.

‡ காந்தா ஸம்ஹிதை—மனைவிபோலிருந்து அறிவிப்பது.

† மித்ர ஸம்ஹிதை—உயிர்நண்பன்போலிருந்து அறிவிப்பது.

களாகி உபதேசிப்பதுபோல இக்காலத்திலும் மாந்தர்களின் மனப் போக்கின் வழியேசென்று நல்லவிஷயங்களை அறிவித்தற்குரிய உபாயங்களை வெளியிடுவதற்கு அறிஞர்கள் முன்வரவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

நமது ஸித்தாந்த நூல்கள் இதுவரையிலும் அச்சில் வெளிவராதவை எவ்வளவோ இருக்கின்றன. வெளிவந்துள்ள ப்ரபந்த ரஹஸ்ய வியாக்யானங்களில் புதைபொருளாகவிருக்கின்ற விஷயங்கள் அளவற்றன. இவற்றையெல்லாம் பெரியார்களைக்கொண்டு ஆராய்ந்து வெளியிடுவதற்கு வேண்டிய முயற்சி நடந்துகொண்டிருக்கின்றன. இம்முயற்சி பழுதாகாதிருக்க, முன்பே சந்தாதார்களாகஇருப்பவர்கள் தங்கள் நண்பர்களையும் சந்தாதார்களாகும்படி தூண்டி இயன்றவரை உதவிபுரியவேண்டும். நம் திவாகரத்திற்கு வருஷத்தில் சந்தா ரூபா இரண்டு செலுத்துவதென்பது ஒரு பெரிய காரியமில்லை. அன்பில்லாதவர்கள் இந்த இரண்டு ரூபா செலுத்துவதையும் பெரும் பாரமாகக் கருதுகின்றார்கள். சந்தாத்தொகையைக் குறைத்து நல்ல விஷயங்களை மட்டமான காகிதத்தில் வெளியிடுவது அவ்வளவுஉசிதமில்லையென்று கருதுகிறோம்.

உலகத்தில் எவ்வளவு மதிப்புடையவர்களாய் விளங்கினாலும் தத்துவஞானம் இல்லாதபோது அவருக்கு மோக்ஷமில்லையென்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். தத்துவஞானம் அறிவு நூலை ஓதுவதால் உண்டாகும். அவ்வறிவு நூலை, அறிவொழுக்கம் நிறைந்த ஆசிரியன் சந்நிதியடைந்து அவன் உகக்குமாறு பணிவிடை செய்து பயிலவேண்டும். இக்காலத்தில் அம்முறையைக் கைப்பற்றுதல் என்பது அரிதிலும் அரிதாய்விட்டது. இனி இக்காலத்தில் எவ்வாறு தத்துவஞானம் பிறந்து உய்வதென்பதை ஆராயவேண்டியது அறிவுடையோர் கடமையாகும். ஏகலவன் என்ற வேடன் துரோணாசார்ய விக்ரகத்தை யுண்டுபண்ணி அதனிடத்தில் அன்புடன் வழிபாடு செய்து அரிய வில்வித்தையைக் கற்றுக் கொண்டானென்பது உலகமறிந்ததே. அதுபோல இக்காலத்தில் அறிவொழுக்கங்களில் பூரணராயிருக்கும் ஆன்றோர் உகந்தெழுதிய விஷயங்களை, 'ஆசார்யன் ஸந்நிதியடைந்து விஷயங்களைக் கேட்டுக்

கொள்ளும் பாக்யம் பெறவில்லையே; என்செய்வது' என்ற அநுதாபத்துடன் பயின்றால் தத்துவ ஞானமுண்டாகும், அதனால் வீடுபேறு ஸித்திக்கும். இதுவே இக்காலத்திற்கேற்ற சுலபமான உபாயமாகும். நமது திவாகரத்திற்கு விஷயதானம் செய்பவர்கள் ஜ்ஞாநாநுஷ்டான ஸம்பந்நர்களாதலால் அவ்விஷயங்களை மிக்க அன்புடன் பயில்பவர்கட்கு உண்மை யறிவுண்டாகு மென்பதிற் சந்தேகமில்லை. இதுவே நம் திவாகரம் போன்ற பத்திரிகையைப் பயில்வதால் கிடைக்கும் ஊதியம். ஏனைய பத்திரிகைகளைப்படித்துப் போதுபோக்குவதற்கும் இதனைப் பயில்வதற்குமுள்ள வாசி தெரிந்து கொள்வதற்காகவே இவ் விஷயம் இங்குக்குறிப்பிடலாயிற்று.

நமது விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை எவ்வகையானும் பரவச் செய்யவேண்டுமென்ற நன்னோக்கத்துடன் நமது ஸமய திவாகரம் தோன்றியதென்ற விஷயத்தைப் பல பத்திரிகை வாயிலாக வெளியிட்டுள்ளோம். காலத்திற்கேற்றவாறு அரிய பெரிய விஷயங்களை எளிய நடையில் எழுதிச் சிறுசிறு புஸ்தகமாக வெளியிடுதல், யாவரும் உணர்ந்துகொள்ளத்தக்க இன்றியமையாதவைகளை அச்சிட்டு இலவசமாகக்கொடுத்தல், வெளியேறாமல் ஏட்டளவிற் சிதலுக்கிரையாகிக் கொண்டிருக்கிற அரிய நூல்களை வெளியிடுதல் முதலிய வழிகளிற் செய்யவேண்டிய வேலை நிரம்ப உள்ளது. இக்காரியங்களைக் குறைவற செய்து முடிக்கவேண்டுமென்ற கருத்தால் அச்சியந்திரசாலை நிறுவப் பெற்றுளது. அபிமானிகளின் சகாயக்குறைவினால் கருதிய காரியங்களை விரைவில் செய்வதற்கியலவில்லை.

ஒரு பொதுக்காரியம் செவ்வனே நடைபெற வேண்டுமானால் பல பெயர்களுடைய துணை வேண்டும். நம் திவாகரத்திற்குப் பல சந்தாதார்களிருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் திவாகரத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டுவரவேண்டுமென்று கருதுவார்களாகில் விரைவில் விர்த்தியாகிவிடும். இனி, அபிமானிகளும் சந்தாதார்களும் தனவான்களும் எவ்வகையால் உதவிபுரிந்தால், திவாகரம் விர்த்தியாகுமோ, அவ்வகையான் உதவிபுரிந்து விர்த்திசெய்ய வேண்டுகிறோம்.

ப. அ.

ஸ்ரீ:

வேதபுருஷனுக்கும், கலிபுருஷனுக்கும் ஸம்வாதம்.

வேத—காலதேவதையே! உனக்குக் கலி புருஷனென்ற பெயர் எப்பொழுதுண்டாயிற்று?

கலி—உம்முடைய மதிப்புக் குறைபடுகிற இக்கலியுகத்தில் தான் இப்பெயரைப் பெற்றேன்.

வேத—எல்லாப் பிரமாணங்களிலும் சிறந்து விளங்குகிற எனக்கு இக்காலத்தில் மதிப்புக் குறைந்ததென்றனையே; யாது பற்றி?

கலி—எல்லாப் பிரமாணங்களிலும் சிறந்து விளங்குகின்றேனென்கிறீரே; இது உமக்குத் தெரியவில்லையா?

வேத—எனக்குத் தெரிந்தது; தெரியவில்லை யென்பதிருக்கட்டும். நீ தான் இப்பொழுது தெளிவாய்ச் சொல்லிவிடலாகாதா?

கலி—உம்மால் சிறப்பித்துச் சொல்லப்படுகிற பகவானைப் பலகாலம் வேண்டித் தவஞ் செய்தேன். அவர் பிரத்யக்ஷமானார். அப்பொழுது அவரை நோக்கி, தேவரீர் ஆக்கல் காத்தல் அழித்தல் என்றமூன்றுதொழில்களையும் என்னை (காலத்தை) நோக்கியே செய்கின்றீர்; இவ்வளவு உபகாரம் செய்கின்ற எனக்கு ஒவ்வொரு யுகத்திலும் யானே ஏகசக்ரவர்த்தியா யிருந்து அரசு செய்யத்தக்க பதவியைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கவர் 'பிறகுதருகிறேன்; பிறகுதருகிறேன்' என்று மூன்று யுகம் வரை கடத்திவிட்டார். பின்னர் துவாபரயுக முடிவில் 'எம்பெருமானே! கடந்தமூன்று யுகங்களிலும் எனக்கோர் மதிப்புங் கொடுக்காமல் சும்மா விருக்கும்படி செய்துவிட்டீர். இனிமேல் பிறக்கப்போகிற கலியுகத்திலாவது என்னுடைய இராஜ்யமே இராஜ்யமாக விளங்குமாறு வரந்தந்தருளவேண்டும்' என்று பிரார்த்தித்தேன். பகவானும் என்னுடைய பிரார்த்தனைக்கிரங்கி வரமளித்தார். அதனால் இந்தக் கலியுகத்தில் யானே இராஜாதிராஜனாய் ஜயவீரசிங்க

மாய் விளங்குகிறேன். இப்படியாம்போது உம்முடைய மதிப்புக் குறையாதிருக்குமா?

வேத—நீ இராஜாதிராஜனாய் விளங்கியதால் என்னுடைய மதிப்பு எப்படிக் கெடும்?

கலி—எனக்குப் பகவான் மூன்று யுகங்கள் வரை சிறந்த பதவியைக் கொடுக்காததினால் கோபமே என் மனத்திற் கூடுபூரித்திருந்தது. இக்கலியுகத்திற் சிறந்த பதவி கிடைத்துவிடவே கொடுங்கோல் செய்யத் தொடங்கினேன். என்னுடைய கொடுங்கோலில் உம்முடைய மதிப்பு எப்படி நிலைபெறும்?

வேத—நீ கொடுங்கோல் புரிகின்ற வகையினைவிரித்துரைப்பாய்.

கலி—என்னுடைய கொடுங்கோலை விரித்துரைப்பனேல் பாரதமாம்.

வேத—உன்னுடைய கொடுங்கோலின் வகை விரிவானாலும் பாதகமில்லை. எடுத்துரைப்பாய்.

கலி—ஒருகாலத்தில் என்னுடைய மந்திரிகளோடு வைபைகூடி 'நாம் இனிக்கொடுங்கோல் செலுத்துவதற்குச் சட்டதிட்டங்கள் ஏற்படுத்தவேண்டும்' என்று ஆலோசனை செய்தேன். அப்பொழுது தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள் பலவுண்டு.

வேத—நீ கொடுங்கோல் செலுத்துவதும் மனந்தோன்றியபடி செய்யாமல் பரியாலோசனை செய்துதான் செய்கின்றனையோ; நன்றாயிருக்கிறது. இஃதிருக்கட்டும். உன்னுடைய மந்திரிமார்களின் பெயரென்ன?

கலி—பொய், கொலை, கள், களவு, காமமென்ற பஞ்சமா பாதகங்களே மந்திரிமார்களாவார்கள். பிரதானிகள் எப்படி இருப்பார்களென்பதை நீரே தெரிந்துகொள்வீர்.

வேத—அம்மம்ம! நல்லமந்திரிமார்களைச் சேர்த்துக்கொண்டிருக்கிறாய். இவர்களை எங்கே தேடிப்பிடித்தாய்.

கலி—ஏன்! இவர்களுக்கென்ன குறையுண்டு. என்மனத்திற்கியைந்தவர்களாயிற்றே. பொய்யென்பவன் உண்மையையில்லையென்று வாதிப்பான்; கொலையென்ற மந்திரியோ நல்லோரைக் கொலை

புரிந்து மகிழ்வான். கள்ளென்பவன் எவ்வளவு திடமான புத்தியையும் மயக்குவான்; களவென்பவன் பிறர்பொருள்களை வஞ்சித்துக்கவர்வான். காமம் என்பவன் கற்புடை மாதர்கள் இல்லையெனச் செய்வான்; இத்தகைய மந்திரிமார்களில்லாத போது என்னுடைய கொடுங்கோன்மை எங்ஙனஞ்செல்லும்?

வேத—இதுவரையிலும் உன்னுடைய மந்திரிமார்களின் செயலைக் கேட்டேன். அப்பப்பா! என்ன கொடுமை! இதைக்கேட்ட என் காதிற்குப் பிராயச்சித்தம் செய்யவேண்டும். இதுநிற்க, யான் முன்கேட்டுக்கொண்டபடி உங்கள்ஸபையில் தீர்மானஞ் செய்யப்பட்ட விஷயங்களைச் சொல்வாய்.

கலி—என்னுடைய கொடுஞ்செயல்களில் கோடியில் ஒரு பாகங்கூட சரியாக எடுத்துரைக்கவில்லை. அதற்குள் இப்படி நடுங்குகின்றீரே; எல்லாவற்றையும் எடுத்துரைப்பேனுகில் என்ன பாடுபடுவீரோ? தெரியாது. இனி எங்கள் ஸபையில் தீர்மானிக்கப்பட்ட விஷயங்களைத் தெரிவிக்கிறேன்: உத்தமபாஷைகளாகிய ஸம்ஸ்க்ருத திராவிட முதலியவற்றை உலகில் வழங்காமல் தடுத்தல், வேதியர்களை வேதமோதுதல் முதலிய தொழில்களினின்றும் வேறுபடுத்தல், அவர்கட்கு அந்நிய பாஷைகளைப்படிப்பதில் உத்ஸாகத்தைப் பிறப்பித்தல், பலரையும் பக்தியில்லாத வேஷதாரிகளாகச்செய்தல், பகவந்நாமம் வழங்காதிருக்கச் செய்தல், அடக்கத்தை ஆபரணமாகக் கொண்ட மாதர்கட்கு ஸ்வாதந்தர்யத்தைக் கொடுத்தல், விதவைகளைக் கல்யாணப்பெண்களாகச்செய்தல், இழிந்தோர்களை உன்னத பதவியில் வைத்தல், புத்திரர்கள் பெற்றோர்கள் வார்த்தை கேட்காதிருக்கச்செய்தல், மனைவியர் நாயகருடைய சொற்கடந்து திரியும்படி செய்தல், ஆலய வழிபாட்டை ஒழித்தல், வேதமந்திரம் தங்குவதற்கு இடமாயிருக்கின்ற அர்ச்சகருடைய இருதயத்தில் பொய், குறளை, வஞ்சனை முதலிய துர்ப்புத்திகளை குடிகொள்ளும்படி செய்தல், நாஸ்திக வாதத்தைப்பரவச்செய்தல் என்ற விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன.

வேத—இந்தத் தீர்மானங்களெல்லாம் அநுஷ்டானத்திற்கு வந்து விட்டனவா?

கலி—இவையெல்லாம் அநுஷ்டானத்திற்கு வந்துவிட்டன. மேலும் தீர்மானிக்கக்கூடிய விஷயங்கள் உள்ளன. அவையெல்லாம் அப்போதைக்கப்போது ஸபை கூடி தீர்மானிக்கப்பெறும்.

வேத—உன்னுடைய கட்டளைகளை உலகத்தினர் அன்புடன் மேற்கொண்டு நடக்கின்றனரா?

கலி—அதற்கென்ன தடை. என்னுடைய ஆக்ஞையை உலகினர் சிரசாக வஹித்து அதன்படி நடந்து வருகின்றார்கள்.

வேத—உன்னுடைய ஆக்ஞையைக் கடந்து நடப்பவர்கள் ஒரு சிலரேனுமில்லையா?

கலி—என்னுடைய ஆக்ஞையைக் கடந்து நடப்பவர் ஒரு சிலருண்டு.

வேத—அவர்கள் யாவர்?

கலி—நியமப்படி வைதிக கர்மங்களையனுஷ்டிக்கின்றவர்கள், மெய்யடியார்கள், எப்பொழுதும் ஜபதபங்களைச் செய்து கொண்டிருப்பவர், பிறர் பொருள்களை அபகரிக்காதவர், சூது வஞ்சனையில்லாதவர்கள், தாய் தந்தையரின் சொற்கேட்டு நடப்பவர், உண்மையுரைப்பவர், கற்புடைய மாதர்கள், ஆஸ்திக புத்தியுடையவர் என்ற இவர்கள் என்னுடைய ஆக்ஞையைக் கடந்து நடப்பவராவார்.

வேத—இவர்களைத் தண்டிக்கின்றனையா?

கலி—இவர்கள் இராஜத் துரோகிகளாதலால் இவர்கள் மேற்கொண்ட காரியம் தடைபடும்படி வேண்டிய முயற்சிசெய்துவருகிறேன். இன்னும் சில காலத்திற்குள் இவர்கள் என்னுடைய கிங்கரர்களால் நசுக்குண்டு போவார்கள்.

வேத—நீங்கள் ஸபை கூடிச்செய்த தீர்மானங்களுள் உத்தம பாஷாஜ்ஞானம் உலகிலில்லாதபடி செய்தல் என்பதை முதல் தீர்மானமாகக்கொள்வற்கு ஏதேனும் கருத்துண்டோ?

கலி—ஆலோசனைசெய்துதான் இதனை முதல்தீர்மானமாகக் கொண்டு வந்தோம்.

வேத—இதன் விஷயத்தைச் சிறிது விரித்துரைப்பாய்.

கலி—உலகினரைக் கெடுப்பதற்கு மூலகாரணம் எதுவாகலாமென்று பரியாலோசனைசெய்து, உத்தமபாஷைகள் வழங்கவொட்டாமல் தடுப்பதே இவர்களைக் கெடுப்பதற்கு முக்யசாதனமாகுமென்றுதெளிந்தேன். இதுவே முக்யசாதன மாகுமென்பதையும் விரித்துரைக்கிறேன்.—நித்யா நித்யங்களை யறிவதற்கும்; தர்மங்களின் மர்மங்களையறிவதற்கும் சாதனங்களாக இருப்பன ஞானநூல்களே. இந்தஞானநூல்கள் ஸம்ஸ்க்ருத த்ராவிடபாஷைகளிலே இருக்கின்றன. இவற்றைப்பயிலாதபோது உலகினர்கட்கு ஞானசூன்யமே உண்டாகும். ஞானமில்லாதபோது ஒழுககமுமில்லாதொழியும். இவை யிரண்டுமில்லாத காலத்தில் மாந்தர்கள் மிருகங்களோடொப்பவர்களாய் விடுவார்கள். இப்படி யிருப்பவர்களன்றோ என்னுடைய கிங்கரர்களாவார்கள். இவர்களை இங்ஙனமாக்குவிப்பதற்கு அன்னிய பாஷையைப் பரப்பாதபோது எப்படி முடியும்? இப்போது வழங்குகிற அன்னியபாஷை உலகியலையே அறிவிக்கின்றது. இதனைப்பயில்வதால் ஆத்மாவின் இயல்பு இன்னது. கடவுளின் ஸ்வரூபமின்னது என்று அறிந்து கொள்ள முடியுமா? முடியாதன்றோ! இந்தஅன்னிய பாஷையைப் பயில்வதினால் தேகமேஆத்மாவெனவும், அதனைப்போஷிப்பதே புருஷார்த்தமெனவும் மதிக்கின்றனர். ப்ராதக்காலஸ்நாந ஸந்தியாவந்தன ஜபாதிகளை மறந்தனர். நியம நிஷ்டையுடையவர்களைக் கண்டு 'இவர்களென்ன பழம்பஞ்சாங்கமாயிருக்கின்றார்களே' என்று இகழ்வார்கள். ஆகாரநியமமின்றிக்கண்டவிடத்தி லெல்லாம் சாப்பிடத்தலைப்படுவார்கள். பெரியார்களோடுவிதண்டாவாதம் பேசுவார்கள். மறுமை வீடென்பதை ஒப்புக்கொள்ளாதவர்களாதலால் மனம்போனபடியே பாபச்செயலையே செய்தற்கு முற்படுவர்கள். தம்மைத்தாமேவியந்துகொள்வார்கள். அதனால் ஞானக்கண் பொட்டையாய் விடுவார்கள். இங்ஙனம் அன்னிய பாஷையைப் பரப்புவதாலாகிய ஒரு சாதனத்தால் பல காரிய ஸித்தியுண்டாகுமென்று மதித்தே இதை முதல் தீர்மானமாகக் கொண்டேன்.

வேத—கலிபுருஷா! நீ மிகவும் சாமார்த்தி முடையவனு யிருக்கின்றய். உன்னுடைய முதல் தீர்மானத்தைக் கேட்டு வியப்பு ஒரு புறமும், துக்கமொரு புறமும் உண்டாயின இனி மற்றத்தீர்மானங்களின் விவரங்களை இனித் திவாகரம் வெளியாகும்போது கேட்கிறேன்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீவரவரமுநயே நம:

பரவாதி கேசரியார் அருளிச்செய்த

ஸ்ரீ சைல வைபவம்.

——(::)——

ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதிப் பெரியதிருமண்டபத்தில் விசதவாக் சிகாமணியென்றும முப்பததாருயிரபெருக்கர் எனறும் பிரஸித்தரான ஸ்ரீமணவாளமா முனிகள் நம்பெருமாள் நியமனத்தின்படி திருவாய் மொழியின் ஈடு முதலிய வ்யாக்யானங்களையும் ரஹஸ்யாதிகளையும் மஹோபந்யாஸம்புரிந்தருளி, சாத்துமுறைசெய்தருளுங்காலத்தில் அதனைத் தாமும் கோஷ்டியோடங்வயித்துச் செவிசார்த்தித்திருவுள்ள முகந்தருளிய நம்பெருமாள் ஒரு குழந்தையுருக்கொண்டு அக்கோஷ்டியில் முன்வந்து வரவரமுனிவரர்க்குத் தாம் சிஷ்யனுன தம் ஈடுபாடு உலகத்துக்கு வெளியாகுமாறு "ஸ்ரீசைலேச" என்ற தனியனை அருளிச்செய்து மறைந்தனர். இதுவே தென்கலை வேதத்திற்குத் தனியனுகத் திவ்யதேசங்கள்தோறும் அநுஸந்திக்கும்படி பெருமாள் நியமித்தருளினர். இதனை 'யதீந்த்ரப்ரவணப்ரபாவம்' விளங்கவுரைக்கும். அத்தனியனின் வைபவத்தைக்கூறுநிற்பது இப்பிரபந்தம். திவாகரத்தில் முன் வெளியிடப்பட்ட 'மணவாளமாமுனிகள் கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும்பிரபந்தம்போல ஆசார்யகோஷ்டியில் ப்ரஸித்தரான 'பரவாதி கேசரி' என்னும் பெரியாரால் அருளிச்செய்யப்பட்டதாகவும் அநுஸந்தானயோக்யமாகவும் இருப்பதால் இங்குக்குறிப்புரையுடன் வெளியிடலாயிற்று. இது அந்தாதித்தொடையாயமைந்திருப்பதும் அநுஸந்தானத்திற்கு மிகவும் அமைந்ததொன்றே.

கொச்சகக்கலிப்பா.

(1) கூறுகேன் உலகீரே குங்குமத்தோள் அரங்கேசர்
மாறன்மறைப் பொருள்கேட்க மணவாள மாமுனியை
ஏறுமணை தனிலிருத்தி இருநிலத்தில் தாமிருந்து
வீறுடனே செவிசார்த்தி விரையடிபூ சனையாற்றி. (க)

(1) [மணவாள மாமுனிகளின் வைபவப்ரவாகத்தில் ஆழ்ந்தநு பவித்த இவர் "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற படி அவ்வநுபவரஸத்தை உலகத்தாரும் அநுபவித்து உய்யவேண்டு மென்ற ஆர்வ மிகுதியால் இந்நூலை அருளிச்செய்கின்றாராதலின் "கூறுகேன் உலகீரே" என்று தொடங்குகிறார். மாறன் மறைப் பொருள்—திருவாய்மொழியின் ஈடு முதலிய வ்யாக்யானங்கள். ஏறு மணை—ஆசாரியன் எழுந்தருளியிருக்கத்தக்க உயர்ந்த ஆசனம். இருத்தி—வீற்றிருக்கச்செய்து. இருநிலம்—பெரியபூமி. இருந்து— ஆசார்யன் முன்னிலையிற் சீடன் கைகட்டி வாய்புதைத்து அடங்கி யிருக்குமுறையில் இருந்து, "இருந்த குலக்குமரர்" என்று ஜனகன் சபையில் விச்வாமித்திரர்முன் பெருமானும் இளைய பெருமாளும் அடங்கியிருந்த நிலையைக் கம்பர் கூறுவதுங்காண்க. மற்றொன்றற் றில்லாத பொருட்பெருமை மாறன் மறைப்பொருட்கு உண்மையால் அதனைக் கேட்பதிற் பெருமாளுக்கேற்பட்ட ஆர்வமிகுதி தோன்ற இருந்து கேட்டலின் 'வீறுடனே செவிசார்த்தி' என்றார். விரை யடி—மணவாளமாமுனிகளின் மணங்கமழும் திருவடி. அது அடைந் தோர்க்கு நன்ஞானமளித்து நற்பேறுகிய மணத்தைத் தருதலின் விரையடி என விசேடித்தார். பூசனையாற்றி—ஆராதனைசெய்து. தொண்டர் இழியுந்துறை திருவடியே யாதலின் அடிபூசனையாற்றி என்றார். இதனால் நம்பெருமாள் மணவாளமுனிவர்க்குச் சிஷ்யனாயி ருந்து வழிபாடு புரிந்தருளிய சிறப்பினை வெளியிட்டமை காண்க.]

(2) ஆறிரண்டு புறஞ்சூழும் மரங்கமுதல் நூற்றெட்டும்
கூறியசீர் சயிலத்தைக் கொண்டாடி யுரைக்கவேணு
ஊறியதேன் பெருக்கென்ன உன்னியதை யுகந்துரைத்தான்
சேறுவளர் கமலமைந்தன் சிந்தைமகிழ்ந் தொருப்பட்டே. (உ)

(2) [திவ்யதேசங்களில் தலைசிறந்தகோயில் திருமலை பெருமாள் கோயில் என்னும் மூன்றிலும் ஏற்றமும், ஆழ்வார்கள் பதின்மாலும்

மங்களா சாஸனம் பண்ணப்பட்ட பெருமையும் பூலோகவைகுண்டமென்று புராணப்ரஸித்தமும் சக்கரவர்த்தித்திருமகனால் ஆராதிக்கப்பெற்ற பெருமையும் அரங்கத்திற்கேயுண்மையின் 'அரங்கமுதல், நூற்றெட்டும்' என்றார். "மண்ணிலரங்கமுதல் வைகுந்தநாடளவும் எண்ணுதிருப்பதி நூற்றெட்டினையும்" என்றார் திவ்யகவியும். உன்னியதை—பெருமாள் திருவுள்ளம்பற்றியதை. கமலைமைந்தன்—பெரிய பிராட்டியாருக்கு ஞானபுத்திரனை சேனைமுதலியார். நூற்றெட்டுத் திவ்யதேசங்களிலும் ஸ்ரீசைலதனியனைக்கொண்டாடியனுஸந்திக்கும்படி நம்பெருமாள் நியமனத்தால் திருமுகமனுப்பினர் சேனைமுதலியார் என்பது கருத்து. "திருமலை பெருமாள்கோயில் தொடக்கமான திருப்பதிகளுக்கெல்லாம் ஸ்ரீஸேனைமுதலியாருடைய ஸ்ரீமுகமாக 'அநுஸந்தாநகாலங்கள்தோறும் ஜீயர் விஷயமாக நம்பெருமாள் அருளிச்செய்த தனியன் ;—"ஸ்ரீசைலேசதயாபாத்ரம்......ரம்யஜாமாதரம் முனிம்" என்றநுஸந்தித்துத்தொடங்கவும், ப்ரபந்தஞ்சாற்றி, "வாழி திருவாய்மொழிப்பிள்ளை" என்று தொடங்கி, "மணவாளமாமுனியே இன்னமொரு நூற்றாண்டிரும்" என்று அநுஸந்தித்துத் தலைக்கட்டவும் என்று அனுப்பிவிட்டருளி" என்று யதீந்த்ரப்ரவணப்ரபாவத்தில் வருவதுங்காண்க]

(3) பட்டர்பிரான் முதலாய பதின்மர்கலை பழிச்சலிலும்
சிட்டர்களாய்த் தினந்தோறும் திருமணிடு வேளையினும்
இட்டமுற வுணும்பொழுதத் தோண்கரநீ ரேற்கையினும்
அட்டதிக்கும் விளங்குரைத்தார் ஆரியர்கள் அனைவருமே. (௩)

(3) [பட்டர்பிரான்—பெரியாழ்வார். ஆழ்வார்களின் அவதார க்ரமப்படி பொய்கையார் முதலான என்று கூறாமல், நாதமுனிகள் வகுத்த திவ்யப்ரபந்த முறைவைப்பில் பெரியாழ்வார் அருளிச்செயல்களான திருப்பல்லாண்டு முதலியவை தொடக்கத்தில் வைக்கப்பட்டிருத்தலின் 'பட்டர்பிரான் முதலான பதின்மர் கலை' என்றார். ஆண்டாள் பெருமாள் கோஷ்டியிலும், மதுரகவிகள் நம்மாழ்வாருடைய சிஷ்ய கோஷ்டியிலும் சேர்த்து எண்ணப்படுகிற க்ரமம்பற்றி அவ்விருவரையும் நீக்கி, பதின்மர் என்றார். இவ்வாறே உபதேசரத்நமாலையில் ஆழ்வார் பதின்மர் என்றருளிச்செய்வர் வரவரமுனிவரும். பழிச்

சல்—துதித்தல். (அநுஸந்தித்தல்) சிட்டர்—(சிஷ்டர்) ஆசார சீலரான பெரியார். உணும்பொழுதத்து ஒண்கரநீர் ஏற்கையிலும்—ஆபோஜனதீர்த்தஸ்வீகார காலத்திலும். விளங்குரைத்தார்—விளங்க உரைத்தார். (தொகுத்தல் விகாரம்) திவ்ய ப்ரபந்தாநுஸந்தானத் தொடக்கத்திலும், திருமண்காப்பு இட்டுக்கொள்ளுங்காலத்திலும், ஆபோஜனகாலத்திலும் பூர்வாசாரியர்கள் அனைவரும் எட்டுத்திசையிலுள்ளாரும் இவ்வநுஷ்டானத்தால் தெளிவடைந்துய்யும்படி இதனையே அநுஸந்தித்துப்போந்தார் என்றவாறு.]

(4) ஆரியர்கள் கொண்டாடி ஆசரித்த தனியனைத்தான்
பேரியலுந் தொண்டர்குழாம் பெருப்பேறுக் கொண்டனரால்
சீரியராய் வாழவெண்ணிற் செகதலத்தீர் கற்றுணர்மின்
தாரியலும் அரங்கருக்குந் தமிழ்மறைக்கும் மணமாமே. (௪)

(4) [ஆரியர்—கொண்டாடத்தக்கவர்களான பூருவாசாரியர்கள். ஆசரித்தல்—அநுஷ்டித்துக்காட்டல். பேர்இயலும் தொண்டர்குழாம்—தங்கள் பேர் எங்கும் நடையாடுகின்ற அடியார் கூட்டம். பெருப்பேறு (பெரும்பேறு)—பரமபுருஷார்த்தம். "தனியனைத்தான் பெருப்பேறுக் கொண்டனர்" என்றது இத்தனியன் அநுஸந்தானத்தைச்சாதனமாக்காமல் பலமாகவே கருதிப் போந்தாரென்றவாறு. தாரியலும் அரங்கர்—திருத்துழாய்மாலை மணம் கமழப்பெற்ற அரங்கர். தமிழ்மறை—திருவாய்மொழி முதலிய ப்ரபந்தங்கள். ஸர்வகந்தரான திருவரங்கமாலையும் அவனை ப்ரதிபாதித்து ஞானமணங்கமழ்கின்ற திவ்யப்ரபந்தமாலையையும் இத்தனியன் மணவாளமுனி விஷயமாதலின் மணப்பிக்குமென்றவாறு. தமிழ் வேதமாகிய திவ்யப்ரபந்தமும், அப்பிரபந்தச் செழும்பொருளும் (எம்பெருமானும்) மணவாளமாமுனிகளால் விளக்கமுற்றன வாதலின் அவர் விஷயமான இத்தனியனின் அநுஸந்தானம் மிகவும் இன்றியமையாதது என்பதாம். "மாற்றற்ற செம்பொன் மணவாளமாமுனி வந்திலனேல், ஆற்றிற்கரைத்த புளியல்லவோ தமிழாரணமே" என்பதுங்காண்க. இத்தகைய பெருமைவாய்ந்த இத்தனியனை உய்ய நினைவுடைய நீங்கள் ஆசிரியன் மூலமாகக் கற்றுணர்ந்து சிறப்படையுங்கள் என்று உலகத்தாரை நோக்கி உபதேசித்தவாறு.]

(5) மணவாள மாமுனியை வழுத்துரவோர் பயன்பெறுவர்
குணமாகக் கொண்மினிதைக் கொடும்பிறவிப் பிணியகல்வீர்
பணவா ளராவிவராம் பகைத்தாரோ வுய்தலிலர்
மணமுடைய மந்திரமா மதிக்கொள்ளீர் தனியனையே (ரு)

(5) [வழுத்தல்—துதித்தல், உரவோர்—ஞானவான்கள். பயன் பெறுவர்—நித்யகைங்கர்ய புருஷார்த்தத்தைப்பெற்று இன்புறுவர். இதைக் குணமாகக்கொள்மின்—இவ்வாறு அவரை வழுத்துதலையே எப்பொழுதும் இயல்பாகக் கொள்ளுங்கள், குணம்—தன்மையுமாம், கொடும் பிறவிப்பிணிஅகல்வீர்—வேறு எவ்வகையாலுந்தீராத கொடிய பிறவி நோயினின்றும் நீங்க விரும்புமவர்களே! இவர் தாம் பணவாள் அரா—இவர் பணமுடிகளையும் ஒளியையுமுடைய பாம்பாகிய ஆதி சேடனவர். இவர் அவதாரவைபவம் அறியாதார்க்கு அதனை எடுத்துக் காட்டியவாறு விரோதிப்பவர்களைச் சீத்காரபூத்காரங்களால் நிரஸிக்கு மியல்புடையரென்பதாம். ஆதலால் பகைத்தவர் உய்யாரென்றார், மணமுடைய மந்திரம்—"தமிமறைக்கு மணமாமே" என்பதற்குக் கூறியவாறுரைக்க, மதிக்கொள்ளீர்—கருதி அநுஸந்தித்துப் போருங் கள் என்பதாம். முன் இரண்டடிகளால் இத்தனியனுக்கு ப்ரதிபாத்ய ரான வரயோகியரை வழுத்துதலின் பெருமையும், பின் இரண்டடி களாலும் இத்தனியனைத் திருமந்திரமாக மதித்து அநுஸந்தித்தலின் மேன்மையும் காரணங்கள்கொண்டு நிரூபிக்கப்பட்டன.]

வெண்பா.

(6) தனியனென்று பேர்சாற்றித் தண்ணரங்கர் முன்னர்
இனிய திருப்பவளத் தாலே—முனிவரனார்
மாறன்மறை முப்பத்தா றாயிரத்தின் மாண்பொருளைக்
கூறவுப தேசித்தார் கொண்டு. (சு

(6) [முனிவரனார் தண்ணரங்கர் முன்னர் மாறன்மறை முப்பத் தாறாயிரத்தின் மாண்பொருளை (தம்) இனிய திருப்பவளத்தாலே கூற (தண்ணரங்கர் அதனைக்)கொண்டு தனியனென்று பேர் சாற்றி உபதே சித்தார் என்று கூட்டிப் பொருள்கொள்க. திருப்பவளம்—அழகிய பவளம் போன்ற திருவாய். இன்பக்கடலாகிய பகவத்குணங்களையே

அநுஸந்தித்துக்கொண்டிருத்தலின் இனியதிருப்பவளமென்றார். மாண் பொருள்—திருவாய்மொழி ஈட்டிற் பொதிந்துள்ள நுண்பொருள். கொண்டு—திருவரங்கர் அதனைத் தம் திருவுள்ளத்தில் மிகவும் உகப் புடன்ஏற்றுக்கொண்டு. உபதேசித்தார்—வரவரமுனிவர் தமக்காசாரிய ரென்ற நிலையை இத்தனியனுக்குத் தாமே ப்ரவர்த்தகராய் நின்று உலகத்தார்க்கு வெளியிட்டருளினர் என்றவாறு.]

(7) தேசமெங்கும் ஈது திருப்பதிகள் தோறுரைக்க
நேச முறவரங்கர் நேமித்தார்—ஏசுமவர்
பாதக ராயெரிவாய் பாழ்நரகிற் றுய்ப்பரின்னல்
வேதனுர் உள்ளமட்டு மெய்த்து (எ)

(7) [ஈது—இத்தனியனை, நேசம்உற—திருவுள்ளத்தில் உகப்பு மிக. ஏசுமவர்—இதன் பெருமையை யறியாது இகழ்ந்து கூறுபவர். எரிவாய் பாழ்நரகு—அக்னிமயமான என்றும் மீளாத நரகம். இன் னல் துய்ப்பர்—துன்பமனுபவிப்பர். வேதனுர்—பிரமன். மெய்த்து— உண்மையுடைத்தாம். அரங்கர் நியமனமாகிய இதனை இகழ்பவர் பிரம கற்பமளவும் மீளாநரகிற்காளாகி யுழல்வர் இது வுண்மை என்பது கருத்து.]

(8) எய்யத் துணிய இராவணியைக் கொன்றவன்காண்
செய்ய நெறிவிளங்குஞ் சேடனவன்—வையந்
தனைவளர்க்க மாறு வரயோகி தானுய்
வினையறுத்து வீடருளும் வேந்து. (அ)

(8) [வரவர முனிவர் பகவத் விஷயானுகூலரக்ஷகமும் ப்ரதிகூல நிரசனமும் உடையராய் விளங்குந்தன்மையை அவரது அவதாரப் பெருமைபற்றிய இதிகாசத்தாற்காட்டுகிறார். எய்ய—எய்து என்ப தன் திரிபு. இராவணி—இராவணன் மகனை இந்திரஜித்து. செய்ய நெறி—பகவத் கைங்கர்யவழி. விளங்கும் சேடன்—ஸர்வதேச ஸர்வ கால ஸர்வாவஸ்தைகளிலும் அக்கைங்கர்யத்தையே புருஷார்த்தமாக மேற்கொண்டொழுகி அதனுல் விளக்கமுற்ற ஆதிசேஷன். "சென் றாற்குடையாம் இருந்தாற் சிங்காதனமாம் நின்றால் மரவடியாம் நீள் கடலுள்—என்றும் புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்

அணையாம் திருமாற்கரவு" என்பதுங் காண்க. வையந்தனை வளர்க்குமாறு—உலகத்திலுள்ள நல்லோர்குழாங்களை நலிவின்றி வாழ்விக்கும்படி. வினை—வீடுபேற்றுக்குத் தடையாயுள்ளவை. வேந்து—யதிஸார்வபௌமராகிய இவர்.]

(9) வேந்தராய் மண்ணாண்டு விண்ணேற லாமெளிதாய்த்
தோய்ந்தவுற வாயிருக்கிற் றேல்லுலகீர்—ஓர்ந்துய்ய
ஏதிகோடு காலன் இருந்தமர்மே வார்விண்ணோர்
நாதனும்வந் தேவணங்கு நன்கு. (௯)

(9) விண்—மோக்ஷம். எளிதாய் விண்ணேறலாம் என்க. தோய்ந்தவுறவு—நெருங்கியஉறவு. அந்தரங்கத்தொண்டு. வரவரமுனிவர்க்கு என்பது அதிகாரத்தாற்கொள்க. உய்ய—பிழைத்துப்போக; அகரவீற்று வியங்கோள். ஏதி—ஆயுதம். கொடு—கொண்டு. காலன் இருந்தமர்—எமதூதர்கள். மேவார்—நெருங்கார். விண்ணோர்நாதன்—இந்திரன். உலகீர் (வரயோகியர் அடிக்கு) உறவாயிருக்கின், மண்ணாண்டு எளிதாய் விண்ணேறலாம, காலன்தமர் ஏதிகொடுமேவார், விண்ணோர் நாதனும் வந்து நன்கு வணங்கும் (ஆதலால்) ஓர்ந்துய்ய என முடிக்க. பிறர்க்கரியவாகிய இப்பேறுகள் நான்கும் வரயோகியரடித்தொண்டர்க்கு எளியவாம் என்பது கருத்து.]

(தொடரும்)

வித்வான். ரெ. இராமையங்கார்,
தலைமைத் தமிழாசிரியர்,
ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல், மதுரை.